TNVR090007642022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05–ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண். 1/2023
இன்
இந்து திருமண முதலேற்பு மனு எண்.178/2022

XXXXXXX ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

XXXXXXXXXXX ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 13.10.2023 அன்று இறுதியான விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. S. அருண்செண்பகமணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. K. ரவி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சான்றாவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரருக்கும் அவரது மைனர் குழந்தைக்கும் இடைக்கால வாழ்க்கை ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் 5 தேதிக்குள் ரூ.30,000/–மும், வழக்கு செலவு தொகையாக ரூ.15,000/–மும் கொடுக்க உத்தரவிடக்

கோரி இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 24-ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம் :-**

இந்த மனுவின் மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 11.09.2019-ஆம் தேதி திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் வைத்து இந்து சமய முறைப்படி திருமணமும், இதர வைபவங்கள் விருதுநகர், அல்லம்பட்டி சௌடேஸ்வரி அம்மன் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. மேற்படி திருமணத்தின் பயனாக 16.08.2020-ஆம் தேதி சாதனா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் முடிந்து நான்கு நாட்கள் மட்டுமே கணவன், மனைவியாக எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் வாழ்ந்த நிலையில் எதிர்மனுதாரர், மனுதாரரை தனது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு தான் வேலை பார்க்கும் சென்னை அம்பத்தூர் சென்று விட்டார். அதன்பின் 50 நாட்களுக்கு பின்னரே எதிர்மனுதாரருடன் சென்னை அம்பத்தூரில் தனிக்குடித்தனம் சென்றனர். இந்நிலையில் மனுதாரர் கருவுற்றதால் வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மனுதாரரை மட்டும் மனுதாரரின் தாயார் வீட்டிற்கு உடல்நிலை சரியில்லாத போதும் கூட பேருந்தில் தனியாக அனுப்பி விட்டார். மனுதாரர் அவரின் தாயார் வீட்டில் தங்கியிருந்தபோது ஒருமுறை கூட எதிர்மனுதாரர் வந்து பார்க்கவில்லை. பின்னர் குழந்தை பிறந்த பின்பு அன்று மாலை தான் மனுதாரரையும், குழந்தையையும் பார்க்க வந்தார். அதன் பின் சில மாதங்கள் கழித்து மனுதாரரையும், குழந்தையையும் அழைத்து வந்து தன் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு அவர் மட்டும் தனியாக சென்னை

அம்பத்தூர் சென்று விட்டார்.

மனுதாரரும் தன் மாமியாருடன் சுமார் நான்கு மாதங்கள் வசித்து வந்த நிலையில் தொடர்ந்து சண்டையிட்டு வந்த மனுதாரரின் மாமியார் மனுதாரர் வீட்டில் இருந்தால் தான் இருக்க மாட்டேன் என்று கூறி அருகில் இருந்த தன் தங்கையின் வீட்டிற்கு சென்று விட்டார். அதன்பின்னரும் மனுதாரர் மறுத்து போக மாட்டேன் என்று கூறிய நிலையில் சின்ன மாமியார் போகுமாறு சொல்லி அடித்தார். வலி தாங்க முடியாத மனுதாரரும் தான் அணிந்திருந்த நைட்டியுடன் தன் சிறுகுழந்தையை கையில் தூக்கிக்கொண்டு பைக்கில் தனது சின்ன மாமனார் பொன்னுச்சாமியுடன் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றார். மனுதாரர், எதிர்மனுதாரரை தொலைபேசியில் சண்டை குறித்து சொல்லியபோது எதிர்மனுதாரர் தன் தாயின் கோவம் தீர்ந்தபிறகு 10 நாட்களில் வந்து கூட்டி செல்வதாக கூறினார். ஆனால், அவ்வாறு வரவில்லை.

மனுதாரரின் உறவினர்கள் சமாதானம் பேசியதால் அழைத்து வந்த எதிர்மனுதாரர், மனுதாரரை தன் வீட்டில் தங்க வைக்காமலும், எதிர்மனுதாரருக்கு சொந்தமான மூன்று வீடுகளை வாடகைக்கு விட்டுள்ள நிலையில் அதில் ஒன்றில் தங்க வைக்காமலும், தன் வீட்டின் அருகில் தனி வீடு பார்த்து மனுதாரரை மட்டும் தனியாக குடித்தனம் வைத்தார். அந்த வீட்டில் 40 நாட்கள் மனுதாரர் வசித்து வந்த நிலையில் மனுதாருடன் எதிர்மனுதாரர் தங்கவில்லை. மனுதாரரின் அடிப்படை செலவு மற்றும் குழந்தையின் மருத்துவ செலவு உட்பட எந்தவித செலவுக்கும் பணம் தராததால் மனுதாரரும் தன் சிறு குழந்தையையும் வைத்துக்கொண்டு கஷ்டப்படுவதால் எதிர்மனுதாரர் செய்கை குறித்து விருதுநகர், கிழக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அப்புகார் குறித்து காவல் துறையினர் எதிர்மனுதாரரிடம் விசாரித்தபோது, தன்னால் வாராவாரம் ரூ.2,000/- தர முடியும் என்று கூறிய எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டபடி 4 வாரம் மட்டுமே

பணம் கொடுத்தார். அதன்பின்னர் பணம் ஏதும் தரவில்லை.

18.10.2022–ஆம் தேதி மனுதாரர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் தன்னையும், தன் குழந்தையையும், சரிவர பராமரிக்காமலும், வேலைக்கு சென்று வாங்கும் சம்பளத்தை மனுதாரருக்கோ மனுதாரரின் குழந்தைக்கோ அத்தியாவசிய செலவிற்கு கூட கொடுக்காமல் இருப்பதாக புகார் மனு கொடுத்தார். அதன்பேரில் ஆஜரான எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்று கூறினார். மேலும், எதிர்மனுதாரர் அத்தியாவசிய செலவிற்கு பணம் தராததால் மனுதாரர் தன் பெற்றோரிடமிருந்து காய்கறி, அரிசி உள்ளிட்ட மளிகை பொருட்களை வாங்கி தற்போது வரை குடும்பம் நடத்தி வருகிறார். மனுதாரரின் பெற்றோர்கள் வயதானவர்கள் ஆவர். இந்த சூழ்நிலையில் மனுதாரர் தனது மைனர் குழந்தையுடன் தனது பெற்றோர் வீட்டில் தங்குவதோ அத்தியாவசிய செலவுகளுக்கு அவர்களிடம் பொருளுதவி கேட்பதும் அவர்களுக்கு கூடுதல் சுமையையே கொடுத்து வருகிறது.

அதேசமயம் எதிர்மனுதாரர் நல்ல வசதி வாய்ப்புடன் உள்ளார். மேலும், அவர் பொறியியல் பட்டதாரி ஆவார். தனது பணியின் மூலம் மாதம் ரூ.60,000/–த்திற்கும் மேலாக வருமானம் பெற்று, அதன்மூலம் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரருக்கும், அவரது பெற்றோருக்கும் சொந்தமாக வீடுகள், இருசக்கர வாகனங்கள் மற்றும் ரொக்க பணம் கையிருப்பு, வங்கி கையிருப்பு, தங்க நகைகள் உள்ளது. அதை வைத்துக் கொண்டு எதிர்மனுதாரர் தனது விருப்பம் போல் வாழ்ந்து வருகிறார். அதே நேரத்தில் மனுதாரர் தனது குழந்தையை வைத்துக்கொண்டு தனது மற்றும் குழந்தையின் ஒவ்வொரு செலவிற்கும் தனது ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோரையே சார்ந்து வாழ்கிறார். எதிர்மனுதாரரின் இத்தகைய செயல்பாடுகளினால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாலும், சிறு

குழந்தையை வைத்திருப்பதாலும் மனுதாரரால் வேலைக்கு செல்ல முடியவில்லை. எதிர்மனுதாரரின் மனைவி மற்றும் குழந்தை என்ற முறையில் மனுதாரர் மற்றும் மைனர் குழந்தையின் ஒவ்வொரு செலவினையும் நிறைவேற்ற வேண்டிய கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது.

மேலும், இம்மனுவின் மனுதாரர், எதிர்மனுதாரருடனான தன் திருமண உறவினை மீட்டு ஒப்படைக்க பரிகாரம் கோரி தனியே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு முதல்நிலை வழக்கு உள்ளது. நீதியின் நலன் மனுதாரருக்கு ஆதவாகவே உள்ளது. இந்த மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு யாதொரு இழப்பும் ஏற்படப்போவதில்லை. மாறாக, அனுமதிக்கப்படாவிடில் மனுதாரருக்கு மிகுந்த இழப்பும், கஷ்ட நஷ்டமும் ஏற்படும். எனவே, மனுதாரர் மற்றும் மைனர் குழந்தைக்கு இடைக்கால வாழ்க்கை ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5–ஆம் தேதிக்குள் ரூ.30,000/– கொடுக்க உத்தரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படிக்கும், பொருண்மை படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மனு அபிடவிட்டில் கண்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் தரப்பில் உண்மையென ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவை அனைத்தும் பொய்யானதாகும். அவற்றை மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 11.09.2019–ஆம் தேதி திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் வைத்து இந்து சமய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பதும், இதர வைபவங்கள் விருதுநகர், அல்லம்பட்டி சௌடேஸ்வரி அம்மன் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது என்பதும், அத்திருமணத்தின்

பயனாக 16.08.2020–ஆம் தேதி சாதனா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதும் உண்மையென ஒப்புக்கொள்ளப்படுகிறது.

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் முடிந்து இருவரும் எதிர்மனுதாரரின் பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக 40 நாட்கள் மட்டுமே விருதுநகரில் வாழ்ந்து வந்தவர்கள் பின்னர் எதிர்மனுதாரர் வேலை பார்க்கும் சென்னைக்கு சென்று தனிக்குடித்தனமாக குடியேறினார்கள். அங்கே இருக்கும்பொழுது மனுதாரர் ஆடம்பரமாக செலவுகள் செய்வதும், வீட்டில் பொறுப்பின்றியும் இருந்து வந்தார். எதிர்மனுதாரர் அதுபற்றி கேட்கும்போது கெட்ட வார்த்தைகளால் திட்டுவதும், உதாசீனமாக பேசுவதுமாக இருந்து வந்த நிலையில் மனுதாரர் கர்ப்பமுற்றார். கருவுற்றிருந்த 3–ஆவது மாதத்தில் அவரது தாயாரின் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று கூறவே மனுதாரரை சங்கரன்கோவிலில் சேசுபுரத்தில் உள்ள அவரது தாயாரி வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார். பின்னர் எதிர்மனுதாரர் சென்னை சென்றபோது கொரோனா ஊரடங்கு உத்தரவு காரணமாக அங்கே தனியாக இருந்தார். பின்னர் இரண்டு மாதம் கழித்து இ–பாஸ் பெற்று மனுதாரரை பார்ப்பதற்கு சேசுபுரத்திற்கு வந்தார். அவ்வாறு வந்தவரை மேற்படி மனுதாரர் கெட்ட வார்த்தைகளால் திட்டியும், உதாசீனப்படுத்தியும் கொடுமை செய்தார். அதனால் எதிர்மனுதாரர் விருதுநகருக்கு வந்து விட்டார்.

பின்னர் மனுதாரருக்கு 7–ஆவது மாதத்தில் மேற்படி சேசுபுரத்தில் கொரோனா ஊரடங்கின் காரணமாக எளிய முறையில் வளைகாப்பு நடத்தப் பட்டது. அதன் பின்னிட்டு எதிர்மனுதாரர், மனுதாரரை பார்க்க சென்றபோது, அவர் நான் உனக்கு தான் கர்ப்பமானேன் என்று உனக்கு தெரியுமா என்னை ஏன் பார்க்க வருகிறாய் என்று திட்டி அனுப்பினார். மனுதாரருக்கு 16.08.2020–ஆம் தேதி பெண் குழந்தை பிறந்ததை பார்ப்பதற்காக எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் சென்றபோது மனுதாரர் அவர்களை

உதாசீனமாக பேசியுள்ளார்.

அதன்பின்னர் குழந்தை பிறந்து பல மாதங்கள் ஆன பின்னரும் மனுதாரர், எதிர்மனுதாரரர் வீட்டிற்கு வரவில்லை. எதிர்மனுதாரரும், அவரது பெற்றோர்களும் பலமுறை வற்புறுத்தி கூப்பிட்டதால் குழந்தை பிறந்து 6 மாதம் கழித்து குழந்தையுடன் விருதுநகருக்கு வந்தார். அவ்வாறு வந்தவர் எதிர்மனுதாரரின் பெற்றோர்களை அசிங்கமாக பேசியும், உதாசீனமாக குறைகள் கூறியும் இருந்துள்ளார். 2021 செப்டம்பர் மாதத்தில் மனுதாரர், எதிர்மனுதாரரிடமும், அவரது பெற்றோரிடமும் சொல்லாமல் குழந்தையை தூக்கிக்கொண்டு அவரது தாயார் வீட்டிற்கு சென்று விட்டார். அங்கிருந்து கொண்டு மனுதாரர், அவரது தம்பியின் செல்போனை வைத்துக்கொண்டு எதிர்மனுதாரரை பற்றி உதாசீனமாக கூறியும், அவரை வேண்டாம் என்றும் கூறியும் செல்போனில் status–கள் வைத்துக்கொண்டு மனதளவில் கொடுமைப்படுத்தி வந்துள்ளார். மேலும், எதிர்மனுதாரருக்கு அடிக்கடி போன் செய்து கெட்ட வார்த்தைகளால் திட்டியும், மிரட்டியும் கொடுமைகள் செய்தார்.

மனுதாரர், எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து 2022 ஜூன் மாதம் வரை அவரது தாயார் வீட்டில் இருந்து வந்தார். பின்னர் பெரியோர்களை வைத்து பேசி மனுதாரரையும், குழந்தையையும் அழைத்து வந்த எதிர்மனுதாரர் தனிக்குடித்தனமாக வைத்தபோது மனுதாரர் சின்ன வீடாக வாடகைக்கு பிடித்திருக்கிறாயே, நீயெல்லாம் ஒரு ஆம்பளையா, வக்கத்த பைய வீட்டில் வந்து மாட்டிக்கிட்டேன் என்று எதிர்மனுதாரரை திட்டியுள்ளார். அவர்கள் அந்த வீட்டில் வசித்து வந்தபோது, எதிர்மனுதாரருடன் தினசரி சண்டை இடுவதும், கெட்ட வார்த்தைகளால் திட்டுவதுமாக இருந்து வந்துள்ளார். மேலும், மேற்படி மனுதாரர் எதிர்மனுதாரரை பார்த்து நீ தூக்கு போட்டு சாவு என்று அடிக்கடி சொல்லி மனதளவில் காயப்படுத்தியுள்ளார்.

பின்னர் 2022 ஜூலை மாதத்தில் எதிர்மனுதாரர் மீது விருதுநகர் கிழக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அப்புகாரின் மீது நடைபெற்ற விசாரணையில் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்பதை அறிந்து மனுதாரருக்கு ஆலோசனை கூறி அனுப்பியுள்ளார்கள். மேற்படி வாடகை வீட்டில் வசித்து வந்த நிலையில் எதிர்மனுதாரரிடம் எந்த தகவலும் சொல்லாமல் அவரது தாயாரிடமிருந்து பிரிட்ஜ், வாஷிங்மெஷின் வாங்கி வைத்துள்ளார். எதிர்மனுதாரர் நாமிருக்கும் வசதிக்கு இந்த ஆடம்பொருள் தேவைதானா என்று சொல்லியதற்கு எதிர்மனுதாரருடன் சண்டையிட்டுள்ளார். மேலும், தினசரி இரவு 01.00 மணி வரை எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு கொடுமைகள் செய்துள்ளார். எதிர்மனுதாரர் B.E., வரை படித்துள்ளார். படிப்புக்கேற்ற வேலை கிடைக்காததால் கட்டிட சித்தாள் வேலை செய்து, அதன்மூலமாக கிடைத்த வருமானத்தை மனுதாரரிடம் கொடுத்தபோது, வருமானம் குறைவாக உள்ளதாகவும், தன்னால் ஆடம்பரமாக செலவு செய்ய முடியவில்லை என்று கூறி சண்டையிட்டுள்ளார். மேலும், வருமானம் குறைவாக உள்ளதைப் பற்றி கிழக்கு காவல் நிலையத்தில் 2022 ஆகஸ்ட் மாத இறுதியில் அளித்த புகாரின் பேரில் நடைபெற்ற விசாரணையில் எதிர்மனுதாரர் வாரம் ரூ.2,000/- கொடுத்து விட வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார்கள். எதிர்மனுதாரரும் வாரந்தோறும் மனுதாரருக்கு கொடுத்து வந்தார். ஆனால், அந்த தொகையும் போதாது என்று சண்டையிட்டு பொய்யான குற்றச்சாட்டுக்களை கூறி 2022 செப்டம்பர் மாத இறுதியில் விருதுநகர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் நடைபெற்ற விசாரணையில் மனுதாரரை எந்தவித பிரச்சனையும் செய்யாமல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழும்படி அறிவுரை கூறினார்கள். மேற்படி மனுதாரரோ தனக்கு சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றும், பெரிய தொகை ஜீவனாம்சமாக வேண்டுமென்றும் வாதிட்டார். எதிர்மனுதாரர் காவல்

நிலையத்திற்கு விசாரணைக்கு சென்ற ஒவ்வொரு முறையும் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

மனுதாரர் செய்த கொடுமைகளினாலும், பிரச்சனைகளினாலும் எதிர்மனுதாரர் சென்னையில் வேலை பார்க்க முடியாமல் போய்விட்டது. எதிர்மனுதாரர் பொறியியல் படிப்பு முடித்திருந்தாலும், விருதுநகரில் அதற்கேற்ற வேலை கிடைக்காமல் கட்டிட சித்தாள் வேலை பார்த்து நாளொன்றுக்கு ரூ.250/- மட்டுமே சம்பளமாக பெற்று வருகிறார். அந்த வேலையும் தினசரி கிடைக்காது. எதிர்மனுதாரர் அவரது வயதான தாய், தந்தையரை உடன் வைத்து பராமரித்து வருகிறார். அவரது பெற்றோருக்கு உள்ள சக்கரை நோய் மற்றும் இதர உடல்நலக்கோளாறுகளுக்கும் எதிர்மனுதாரரே அவரது வருமானத்தில் இருந்து செலவுகள் செய்து வருகிறார். மேலும், எதிர்மனுதாரருக்கு சொந்தமாக அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இல்லை. கையிருப்பு பணம் இல்லாமல் வறுமையில் வாழ்ந்து வருகிறார். மேலும், மனுதாரரின் செயல்களால் மன உளைச்சலிலும், வேதனையிலும் இருந்து வருகிறார். மேற்படி மனுதாரர், எதிர்மனுதாரரை விட்டு தன்னிச்சையாகவே பிரிந்து சென்றுள்ளார். எனவே, மனுதாரர், எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் கோரும் உரிமையை இழந்துள்ளார். எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**6.** தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**7.** அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 11.09.2019–ஆம் தேதியன்று திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமண வாழ்க்கையின் பயனாக 16.08.2020–ஆம் தேதியன்று சாதனா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் பொறியியல் பட்டதாரி என்றும், அவரது பணியின் மூலம் ரூ.60,000/–க்கும் மேலாக வருமானம் பெற்று வருவதாகவும், எதிர்மனுதாரருக்கும், அவரது பெற்றோருக்கும் சொந்தமாக வீடுகள், இருசக்கர வாகனங்கள் மற்றும் ரொக்கப்பணம் கையிருப்பு, வங்கி கையிருப்பு, தங்க நகைகள் ஆகியவை உள்ளதாகவும், அதை வைத்துக்கொண்டு தனது விருப்பம் போல் வாழ்ந்து வருவதாகவும், எதிர்மனுதாரரின் பராமரிப்பு இல்லாததால் மனுதாரர் தனது மற்றும் தனது குழந்தையின் ஒவ்வொரு செலவிற்கும் அவரது ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர்களை சார்ந்து வாழ்ந்து வருவதாகவும், சிறு குழந்தையை வைத்திருப்பதால் வேலைக்கும் செய்ய இயலவில்லை என்றும், மனுதாரருக்கும், அவரது மைனர் குழந்தைக்கும், இடைக்கால வாழ்க்கை ஜீவனாம்சமாக ரூ.30,000/– வரை தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

**8.** மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் திருமணம் நடந்ததையோ, குழந்தை உள்ளதையோ மறுக்கவில்லை. எனவே, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்பதும், அவர்களுக்கு பெண் குழந்தை உள்ளது என்பதும் தெரிய வருகிறது. மேலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் வேலை பார்க்கும் சென்னைக்கு சென்று தனிக்குடித்னமாக குடியேறியதாகவும், அங்கிருக்கும்பொழுது மனுதாரர் ஆடம்பரமாக செலவுகள் செய்தும், வீட்டில் பொறுப்பின்றியும் நடந்து, எதிர்மனுதாரரை கெட்ட வார்த்தைகளால் திட்டுவதும், உதாசீனமாக பேசுவதுமாக இருந்து வந்ததாகவும், மனுதாரர் கருவுற்றிருந்த 3–ஆவது மாதத்தில் அவரின் தாயாரின் வீட்டிற்கு

செல்ல வேண்டுமென்று கூறவே அவரின் தாயாரின் வீட்டிற்கு அழைத்து சென்று விட்டதாகவும், குழந்தை பிறந்து 6 மாதம் கழித்து பலமுறை அழைத்த பின்னர் குழந்தையுடன் விருதுநகருக்கு வந்ததாகவும், 2021 செப்டம்பர் மாதத்தில் எதிர்மனுதாரரிடமும், அவரது பெற்றோர்களிடமும் சொல்லாமல் குழந்தையை தூக்கிக்கொண்டு அவரது தாயார் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், பின்னர் 2022 ஜூன் மாதத்திற்கு பின்னர் அழைத்து வந்து தனிக்குடித்தனம் வைத்ததாகவும், 2022 ஆகஸ்ட் மாத இறுதியில் கிழக்கு காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் நடைபெற்ற விசாரணையில் மனுதாரருக்கு வாரம் ரூ.2,000/- கொடுக்குமாறு ஆலோசனை கூறியதாகவும், அந்த ஆலோசனையை ஏற்ற எதிர்மனுதாரரும் வாரந்தோறும் கொடுத்து வந்ததாகவும் சொல்லியுள்ளார். ஆக மேற்படி எதிர்மனுதாரரின் கூற்றிலிருந்தே மனுதாரருக்கு வாரந்தோறும் ரூ.2,000/- கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளார் என்பதும், ஆனால், மேற்படி எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டபடி ஒருசில மாதங்கள் மட்டுமே மனுதாரருக்கு கொடுத்து வந்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பிலும் மறுக்கப்படவில்லை.

9. மேலும், எதிர்மனுதாரர் தனது எதிர்உரையில் அந்த தொகையும் போதாது என்று மனுதாரர் சண்டையிட்டு மீண்டும் 2022 செப்டம்பர் மாத இறுதியில் விருதுநகர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், மேற்படி காவல் நிலைய விசாரணையில் மனுதாரர் தனக்கு பெரிய தொகை ஜீவனாம்சமாக வேண்டுமென்று வாதிட்டதாகவும், மேலும், எதிர்மனுதாரர், மனுதாரரின் இவ்வாறான செயல்களால் காவல் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு விசாரணை என்ற பெயரில் அவமானப்படுத்தப்பட்டும், உதாசீனப்படுத்தப்பட்டும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளதாகவும் சொல்லியுள்ளார். மேற்படி மனுதாரர் செய்த கொடுமைகளினாலும், பிரச்சனைகளினாலும் எதிர்மனுதாரர் சென்னையில் வேலை பார்க்க

முடியாமல் போய்விட்டதாகவும், பொறியியல் படிப்பு முடித்திருந்தாலும், விருதுநகரில் அதற்கேற்ற வேலை கிடைக்காமல் கட்டிட சித்தாள் வேலை பார்த்து நாளொன்றுக்கு ரூ.250/- மட்டுமே சம்பளமாக பெறுவதாகவும் சொல்லியுள்ளார். ஆக மேற்படி எதிர்மனுதாரர், மனுதாரர் செய்த கொடுமைகளினால் தான் அவர் சென்னையில் பார்த்து வந்த வேலையை பார்க்க முடியாமல் போய்விட்டதாக கூறியுள்ள காரணமானது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

**10.** மேலும், அதற்கு ஆதரவாக மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கடன் மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டில் B.E., படித்துள்ளதாகவும், கூலி (சித்தாள்) வேலை பார்த்து நாள் ஒன்றுக்கு ரூ.250/- பெற்று வருவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. கணவன் என்ற முறையில் மனுதாரரையும், தகப்பன் என்ற முறையில் குழந்தையையும் பராமரிக்கும் பொறுப்புள்ள ஒரு நபர் பொறியியல் பட்டப்படிப்பு படித்துவிட்டு கூலி சித்தாள் வேலைக்கு செல்வதாக கூறுவது அவருக்கு அவரது குடும்பத்தின் மீதான பொறுப்பின்மையையே காட்டுகிறது. எனவே, மனுதாரருக்கு கணவன் என்ற முறையிலும், குழந்தைக்கு தகப்பன் என்ற முறையிலும் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரருக்கும், அவரது மைனர் குழந்தைக்கும் ரூ.10,000/-த்தை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05-ஆம் தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இடைக்கால ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரருக்கும், அவரது மைனர் குழந்தைக்கும் சேர்த்து மாதம் ரூ.10,000/-த்தை இடைக்கால ஜீவனாம்சமாகவும் மற்றும் வழக்கின் செலவு தொகையாக ரூ.5,000/-மும் இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத்தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 05-ஆம்

தேதிக்குள் இந்த எதிர்மனுதாரர், இந்த மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இடைக்கால ஜீவனாம்சத்தொகையை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து அசல் மனு முடியும் வரை செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05–ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR
சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR
சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2023 இன்
இ.தி.மு.ம.எண்.178/2022
உத்தரவு
நாள். 05.01.2024